மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au




# ஆண்டு 9

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

இங்கு கூடியிருக்கும் பெரியோர்களே, ஆசிரியர்களே, மாணவர்களே உங்கள் அனைவருக்கும் என் தாழ்மையான வணக்கங்கள். இன்று நான் பேச எடுத்துக் கொண்ட விடயம்,

## திருக்குறளின் பெருமை

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**
என்றார் தம் தமிழ்க்கவி பாரதியார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று திருக்குறள். நாடு, மொழி, இனம், சாதி, சமயம், காலம் முதலிய வேறுபாடுகளின்றி உலக மக்களனைவராலும் ஏற்றுப் போற்றத்தக்க அறநெறிகளைக் கூறும் நூல் திருக்குறளாகும். அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பிரிவுகளையும், 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்துப்பாடல்கள் வீதம் 1330 குறள் வெண்பாக்களையும் உடையது.

ஒவ்வொரு குறள் முத்துக்களும் சொற் செறிவும், பொருட் சுருக்கமும் கொண்டனவாய், கேட்கக் கேட்க இன்பம் பயப்பனவாய் விளங்குகின்றன.

**"அணுவைத் துளைத்து, ஏழ்கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்"** என ஔவையார் புகழும் நூல் திருக்குறளாகும். "நான் படித்தறிந்த அறநெறி நூல்களுள் தலை சிறந்த நூல், திருவள்ளுவரது திருக்குறள்" என்று பேரறிஞர் ஆல்பர்ட் சுவைட்சரும் கூறியுள்ளார்.திருக்குறள் உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குச் சான் றாக, உலக மொழிகள் பலவற்றிலும் திருக்குறள் மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளது. உலகோர் அனைவரும் பின்பற்றத் தக்க நெறிகளையே கூறியுள்ளார் திருவள்ளுவர்.

**'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'** எனத் தம் முதற் குறளிலே "உலகு" என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் திருவள்ளுவர். எச்சமயத்தவர்க்கும் எம்மொழியினருக்கும் பொதுவான இறை வழிபாட்டையே கடவுள் வாழ்த்தில் அவர் கூறியுள்ளார். தாய் மதத்தையோ, தாய் மொழியையோ தாய் நாட்டையோ எங்கும் குறிப்பிடாதது, திருக்குறள் உலகப் பொதுவுடைமை என்பதற்குச் சான்றாகும்.

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"** என்னும் வள்ளுவன் வாக்கிற்கமைய நாம் பிழையின்றிக் கற்க வேண்டும், கற்பதோடு மட்டும் நில்லாது அவற்றின் படி ஒழுகவும் பழகிக் கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

அவ்வாறே **"அறத்தான் வருவதே இன்பம்'** என்றும் **"அன்றறிவாம் என்னாது அறம் செய்க"** என்றும் **"ஒழுக்கம் விழுப்பம் தரலான்"** என்றும் **"நன்றி மறப்பது நன்றன்று"** என்றும் **"வறியார்க்கொன்று ஈவதே ஈகை"** என்றும் **"மெய்ப்பொருள் காண்பது அறிவு"** என்றும், மனித வாழ்வை உயர்த்தும் அருள் மொழிகளைக் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

திருக்குறள் உலக மக்களுக்காகப் படைக்கப்பட்ட அறநெறி நூலாகும். "கற்றாங்கு ஒழுகு" என்பதற்கமையத் திருக்குறளைக் கற்று அதன் வழி ஒழுகவென, கற்போம்! கற்றபடி நிற்போம்!

நன்றி.
வணக்கம்.



**ஆக்கம்:**

**திருமதி. நிர்மலா திலகரட்னா**